**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**RANIPET, VELLORE DISTRICT.**
**Case No. CC.43/2020 LW -1 PW-1**

பெயர் :-புவனேஸ்வரி

க/பெ :- ஜெய்கணேஷ் தொழில் :- நர்ஸிங்

கிராமம் :-சோளிங்கர் வயது :- 24

தாலுக்கா :-சோளிங்கர்

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date 02.06.2022.** சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

**.அ.சா. 1 முதல் விசாரணை**.

கடந்த 06.03.2017ம் தேதி ஜெய்கணேஷ் என்பவருடன் சோளிங்கரில் ராமமூர்த்தி மஹாலில் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடந்தது. மாப்பிள்ளை வீட்டார் கேட்டுக்கொண்டதன் பெயரில் 5 1/4 சவரன்கள் மாப்பிள்ளைக்கு 3 சவரன்கள் தங்க பிரேஸ்லெட்டாகவும், 2 சவரன்கள் தங்க செயினாகவும் கொடுக்கப்பட்டது மேலும் இருச்சக்கர வாகனம் வாங்குவதற்காக ரூ80,000 கொடுக்கப்பட்டது மற்றும் வெள்ளிப்பூஜை சாமான்கள் கொடுத்தார்கள் மற்றும் ரூ.2 லட்சம் ரொக்கமாக என் பெற்றோர்கள் மாப்பிள்ளை வீட்டாருக்கு கொடுத்தார்கள், கட்டில் , பீரோ மற்றும் வீட்டுசாமான்கள் மாப்பிள்ளை வீட்டாருக்கு கொடுத்தார்கள். புளியங்கண்ணு கிராமத்தில் திருமணம் நடந்து 2 வாரங்கள் மாப்பிள்ளை வீட்டில் குடியிருந்தோம் அதன்பிறகு ஆற்காடு நகரத்தில் கிரீன் தென்டர் பின்புறம் உள்ள ஒரு வாடகை வீட்டில் வசித்துவந்தோம். புளியங்கண்ணு கிராமத்தில் வாழ்ந்துவந்தபோது என்னுடைய மாமியார் உஷா மற்றும் நாத்தனார் சாந்தி ஆகியோர் என்னை வரதட்சணை கேட்டு கொடுமை செய்தார்கள். என்னுடைய மாமியார் என்னையும் என் கணவரையும் ஒரு தனித்தனியாக அறையில் தங்கவைத்தார்கள் என்னை அவர்கள் வைத்திருக்கும் வளர்க்கும் நாய் இருக்கும் அறையில் என்னை தங்கவைத்தார்கள். அதன்பிறகு நானும் என் கணவரும் ஆற்காடு சென்று விட்டோம் தாலிபிறித்து கவிழ்கும் சடங்கிற்காக என்னுடைய கணவர் என்

தாய் வீட்டிற்கு வந்து விட்டுவிட்டார். என் கணவர் என்னை அவருடைய அம்மா மேலும் கொடுமை செய்வார்கள் என்று என் தாயாரிடம் சொல்லி என்னை என் தாயார் வீட்டிலேயே தங்கவைத்தார். பெறியோர்கள் சமாதானம் பேசிவைத்தார்கள் அதன்பின் நானும் என் கணவரும் ஆற்காட்டில் ஒன்றாக ஒரு மாதம் வாழ்ந்துவந்தோம். அந்த சமயத்தில் என்னுடைய கணவரின் அக்கா சென்னையில் இருந்து வந்து என்னை பார்த்து அவரின் தம்பியும் என்னுடைய கணவருமான ஜெய்கணேஷ் கஷ்டத்தில் இருப்பதாகவும் மேலும் அவருடைய திருமணத்திற்கு என்னுடைய மாமியார் நிறைய பணம் செலவு செய்ததாகவும் அதே போல் நானும் ரூ.5 லட்சங்கள் கொடுக்கவேண்டும் என்று கூறினார். எனக்கு சரியாக உணவு அளிக்கமாட்டார்கள் நாங்கள் ஆற்காட்டில் வாடகை வீட்டில் என்னுடைய மாமியார், மாமனார், கணவர் இருந்துவந்தோம் என்னுடைய நாத்தனார் அவ்வப்போது என்னுடைய வீட்டிற்கு வருவார் மாடியில் என்னுடைய கணவரின் அண்ணன் வசித்துவந்தார். என்னுடைய கணவர் இல்லாத சமயத்தில் என்னுடைய மாமியார் நான் குளிக்கசெல்லும்போது பாத்ரூம் கதவினை வெளியே பூட்டிவிடுவார் அதனால் நான் பயந்துவிடுவேன் என்னுடைய துணிகளையும் கிழித்துவிடுவார். மேலும் ஒரு நாள் என்னுடைய மாமியார் என்னுடன் சண்டை போட்டு நான் என் கணவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்றால் 20 சவரன்கள் நகை அல்லது ரூ5 லட்சங்கள் ரொக்கம் இதில் ஏதாவது ஒன்றை நான் என் தாயார் வீட்டில் இருந்து கொண்டுவரவேண்டும் என்று கொடுமை செய்தார் இதுபற்றி என் கணவரிடம் சொன்னபோது அவர் நான்தான் பைத்தியம் போல் நடந்துகொள்கிறேன் என்றும் அவர் தாயார் என்னை கொடுமை செய்யவில்லை என்றும் கூறினார். அதன் பின் என்னால் தொடர்ந்து அங்குஇருக்கபிடிக்கவில்லை நான் என் தாயார் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பிறகு இராணிப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் ஒன்றை கொடுத்தேன் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது அந்த புகார் மனு அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் ஆஜர், அரசுத்தரப்பு  எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர் எதிரிதரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை  செய்யவில்லை.

D NAVEEN DURAI BABU

Digitally signed by D NAVEEN DURAI BABU

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**RANIPET, VELLORE DISTRICT.**
**Case No. CC.43/2020 LW - 2 PW-2**

பெயர் :-லோகநாதன்

த/பெ :- வேணு தொழில் :- சுயதொழில்

கிராமம் :-சோளிங்கர் வயது :- 50

தாலுக்கா :-சோளிங்கர்

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date 02.06.2022.** சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

**.அ.சா. 2 முதல் விசாரணை**.

கடந்த தேதி மாதம் ஞாபகமில்லை 5 ஆண்டுகளுக்கு முன்பு சோளிங்கர் ராமமூர்த்தி மஹாலில் என்னுடைய மகள் புவனேஸ்வரிக்கும் புளியங்கண்ணுவை சார்ந்த ஜெய்கணேஷ் என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது தேதி ஞாபகத்தில் இல்லை. திருமணத்தின் போது 5 1/4 சவரன்களுக்கு பிரேஸ்லெட்டும் தங்க செயினும் போடப்பட்டது. இருச்சக்கர வாகனத்திற்காக ரூ.80,000ம் மற்றும் ரொக்கம் ரூ.2 லட்சங்களும் வெள்ளியிலான பூஜைசாமான்களும் திருமணத்தின் போது கொடுக்கப்பட்டது. அதன் பிறகு என் மகளின் கணவர் என் மகளுடன் வாழ மறுத்துவிட்டார் என்னுடைய மகள் அவரின் தாயாரிடம் இருந்து பிறித்துவிடுவார் என்று சொல்லி என் மருமகன் என் மகளுடன் வாழ மறுத்துவிட்டார்.. என்னுடைய மகளின் மாமியார் என் மகளின் சாப்பாட்டில் அதிகளவு உப்பு போட்டு கொடுமைப்படுத்தினார் மேலும் அவருடைய துணிமணிகளை கிழித்துவைத்தும் கொடுமைப்படுத்தினார். மேலும் என் மகளின் மாமியார் ரூ 5லட்சம் ரொக்கமும் 15 சவரன்கள் நகையும் கொண்டுவந்தால் தான் என் மகனுடன் வாழ முடியும் என்று சொன்னார். அதன்பிறகு என் மகள் என் வீட்டிற்கு வந்துவிட்டார். என்னுடைய மகள் இது சம்மந்தமாக போலிசாரிடம் புகார் கொடுத்திருந்தார். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் ஆஜர், அரசுத்தரப்பு  எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர் எதிரிதரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை  செய்யவில்லை.

D NAVEEN DURAI BABU  Digitally signed by D NAVEEN DURAI BABU

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**RANIPET, VELLORE DISTRICT.**
**Case No. CC.43/2020 LW - 3 PW-3**

பெயர் :-மகேஸ்வரி

க/பெ :- லோகநாதன் தொழில் :- கூலிவேலை

கிராமம் :-சோளிங்கர் வயது :- 50

தாலுக்கா :-சோளிங்கர்

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date 02.06.2022.** சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

**.அ.சா.3 முதல் விசாரணை**.

கடந்த 06.03.2017ம்தேதி எனது மகள் புவனேஸ்வரியை புளியங்கண்ணுவை சார்ந்த ஜெய்கணேஷ்க்கு சோளிங்கரில் உள்ள ராமமூர்த்தி மஹாலில் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது ரூ 2லட்சம் ரொக்கம் , 1 கிலோ வெள்ளிசாமான்கள் மற்றும் 5 1/4 சவரன் மாப்பிள்ளைக்கு போட்டோம் அதில் 3 சவரன்கள் பிரேஸ்லெட்டும் 2 சவரன் தங்க செயினும் 1/4 சவரன் மோதிரமும் போடப்பட்டது. திருமணம் நடந்து புளியங்கண்ணு மாப்பிள்ளை வீட்டில் ஒரு வாரம் என் மகள் வசித்துவந்தார் அங்கிருந்த சமயத்தில் என் மகளுக்கு அவருடைய மாமியார் சரியாக உணவு அளிக்கவில்லை. என் மகளை நாய் தங்கவைக்கும் அறையில் தனியாக தங்கவைத்தார்கள் என்னுடைய மாப்பிள்ளையும் தனியாக தங்கவைத்திருந்தார்கள். இதுபற்றி கேட்டபோது என்னுடைய மாப்பிள்ளை ரூ5 லட்சம் ரொக்கம் மற்றும் 20 சவரன் நகையும் கொடுக்கவேண்டும் என்று அப்போது தான் சேர்ந்துவாழமுடியும் என்று என்னிடம் கூறினார். அதன்பிறகு என் மகள் இராணிப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் ஆஜர், அரசுத்தரப்பு  எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர் எதிரிதரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை  செய்யவில்லை.

D NAVEEN DURAI BABU
Digitally signed by D NAVEEN DURAI BABU

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.